## மார்ச் - 07 - செவ்வாய்

### புனிதைகள் பிறிப்பெச்சுவா மற்றும் பெலிசிற்றி

### “மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.” - மத்தேயு 6:15

---

### முதல் வாசகம் : ஏசாயா 55 : 10 - 11

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: “மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச்செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்கு திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

**பதில்பாடல்:** நீதிமான்களை இறைவன் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுசிக்கிறார்.

### நற்செய்தி : மத்தேயு 6 : 7 - 15

அந்நாட்களில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். (”ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.”) மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்“ என்றார்.

**தியானம் :** கிறிஸ்தவம் வெறும் போதனையல்ல வாழ்ந்து காட்டுவதாகும். இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு செபிப்பதற்கு கற்றுத் தந்து, எமது வாழ்வையே செபமாக மாற்றவேண்டும் என்று போதிக்கின்றார். இறைவனுடைய திட்டம் என்னவென்று எமது அறிவால், ஆற்றல் குறைந்த சக்தியால் புரிந்துகொள்ள முடியாது. எனினும், இரக்கமும், சாந்தமும், நீடிய பொறுமையும் உள்ள எமது பரலோக தகப்பனிடம் செபிக்கும்போது “பிற இனத்தவரைப் போலப் பிதற்றவேண்டாம்” எனவும் ஆண்டவர் இயேசு எச்சரிக்கை விடுக்கிறார். பரலோக தகப்பனிடம் எமக்குள்ள உறவு எவ்வேளையிலும் மாறுபடாததாக இருத்தல் வேண்டும். அவரை நோக்கி எமது தேவைகளுக்காகச் செபிக்கு முன்னரே “உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கின்றார்” எனவும், “நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” எனக் கற்றுத்தருவதனையும் அவதானிக்கலாம். எங்கள் ஒவ்வொருவரையும் முற்றுமுழுதாக அறிந்துள்ள பரலோக தகப்பனிடம் நாம் ஆபத்திலோ, பொல்லாப்பிலோ, இருக்கும் வேளையில் மாத்திரம் செபிக்க வேண்டுமென்றோ, அல்லது நாம் வழிதவறும் வேளையில் அவரைத் தேடவேண்டுமென்றோ, அல்லது எல்லா முயற்சிகளும் பலனற்ற நிலையில் பரலோக கதவினை நோக்கித் தட்டவேண்டுமென்றோ சொல்லவில்லை. மாறாக, எமது பரலோக தகப்பனை எப்போதும் நாடலாமென நற்செய்தி வலியுறுத்துகின்றது. ஆதலால், நாம் எமது குடும்பத்தின் நலனுக்காக, சமூகத்தின் ஒற்றுமைக்காக, நாட்டின் அமைதியான சமாதானத்திற்காக மட்டுமல்ல, எமது பரலோக தகப்பனுடனான நல்லுறவிற்காக, எமது நல்மனமாற்றத்திற்காக செபிப்போம். “எமக்கென வாக்களித்த அனைத்தையும் செய்து முடிப்பவர்” என்ற அவரது வாக்குறுதியை எப்போதும் நினைவில் கொள்வோம்.